ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

कदाहं भोः स्वामिन्नियतमनसा त्वां हृदि भज-
न्नभद्रे संसारे ह्यनवरतदुःखेति विरसः ।
लभेयं तां शान्तिं परममुनिभिर्याह्यधिगता
दयां कृत्वा मे त्वं वितर परशान्तिं भव हरे ॥

स्तुतिसारस्तवे ॥

ஹே ஸ்வாமின்! நான் சஞ்சலமற்ற என்மனதால் உம்மை ஹிருதயத்தில் தியானம் செய்கிறவனுய் இருந்துகொண்டு ஸகல கஷ்டங்களுககும் இருப்பிடமாயும், எப்பொழுதும் துக்கத்தையளிக்கின்றதுமான இந்த ஸம்சாரத்தில் வெறுப் புற்றவனுய்க்கொண்டு, உமது சரணகமலங்களை ஸந்ததம் தியானித்துக்கொண்டிருக்கும் சிறந்த முனிகளால் எவ்வித சாந்தியானது அடையப்படுகின்றதோ, அவ்வித சாந்தியை எப்போது அடைவேன். ஸம்சாரமென்னும் கடலுக் கப்ப லாய் விளங்கும் ஹே பிரபோ, உமக்கு இயற்கையாயுள்ள கருணையை என்னிடம் கொஞ்சம் ஸமர்ப்பித்து உத்தமமான சாந்தியை எனக்குக்கொடுத்து அநுக்கிரகிக்கவேண்டும்.

ஒருவர் ஸம்சாரத்தில் வெறுப்புக்கொண்டு, அதைவிட்டு விலகவேண்டுமென்று பலவாறுய் பிரயத்தினம் செய்தும், இதர இந்திரியங்கள் ஸ்வாதீனமாயிருந்தாலும்,

चेतस्त्वेकं न वशमयते किं करोमि क यामि ।

மனம் ஒன்றுமாத்திரம், எனக்கு வசமாய் ஆகவில்லையே. என்செய் வேன். எங்குபோவேன் என்று, ஓர் அறிஞர் கூறியதற்கிணங்க தம் மனம் சஞ்சலமில்லாமல் ஒரே நிலையில் சாந்தகுணத்துடன் இல்லையேயென்று, ஸ்ரீ நாராயணனைப் பிரார்த்தித்தால் அவரு டைய அநுக்கிரகபலத்தால் சித்தத்திற்கு சாந்தியேற்பட்டு பக வத்தியானத்தில் நிலைபெற்றிருக்குமெனக்கருதி இவ்விதம் பிரார்த் திக்கிருர். இதனுல், நாமும் பகவானைப் பிரார்த்தித்தால் அவர் அநுக்கிரகத்தால் மனதிறகு சாந்தகுணமேற்பட்டு உத்தமமான வழிகளில் செல்லும் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
குரோதன-ஹூ புரட்டாசி-மீ ௨௭௨

யுக்திவாதம்.

(௫௫௮-ம் பக்கத்தொடர்ச்சி.)

அவருக்கும் ஆயிரம்கோடி தனமென்று அவருடைய பொருளும் ஒரு பரிமாணத்தில் அடங்கியதேயன்றி, அடங்காததாகக் கூறமுடியாது. இதுபோல் புத்திமான்களான பலருக்குள் மேல் கீழ் என்கிற பேதம் ஏற்பட்டாலும் எல்லாருக்கும் சிறந்தவர் என்று எவரைக் கூறுகிறார்களோ அவருடைய புத்தி சக்தியும் ஒருவித பரிமாணத்திற்குட்பட்டதாகவே இருக்கும். ஆகையால் இதைக்கொண்டு விஷயங்களிலுள்ள குணதோஷங்களைப் பூராவும் தீர்மானமாயறிவது சிரமம். மேலும், ஒருவரிடம் நமக்கு இருக்கும் அபிமானத்தையோ துவேஷத்தையோ காரணமாகக்கொண்டு சில புத்திகள் உண்மையிலிருந்தும் மாறலாம். அன்றியும் தமது சொந்த விஷயத்தில் மறுதினம் நடைபெறவேண்டிய காரியங்களில் காலைமுதல் மாலைவரையில் எந்தெந்தசமயத்தில் சுகமோ துக்கமோ எவ்விதம் தம்மால் அடையப்படுமென்று முதல் தினமே யாராகிலும் தமது யுக்தியால் தீர்மானமாய் எழுதிவைக்க முடியுமா? அப்படித்துணிந்து எழுதிவைத்தாலும் அவ்விதமே சரியாய் நடைபெறுமென்று எங்ஙனம் கூறமுடியும்? பல காரியங்கள் நமது ஊகப்படி நடக்காமல் மாறுதலாக நடந்துவிட்டன என்று ஒவ்வொரு ஸமயங்களில் அனுபவிக்கப்பட்ட துக்கம் அவரவர்களுக்கும் ஞாபகத்திலிருக்கலாம். உலக வியவகாரமாயுள்ள இதுபோன்ற அற்பகாரியங்களில் நமது யுக்திக்கு இவ்வளவு சக்திக்குறைவிருக்குங்கால் பரலோகத்தில் அவரவர்களும் பாபபுண்யங்களுக்குத் தக்கவாறு அனுபவிக்கவேண்டிய நரகம்,

ஸ்வர்க்கம் இவைகளைப்பற்றி விசாரிக்கவேண்டிய இடத்தில் யுக்திவாதம் தைரியமாய் எப்படி முன்வரும்? பின்னும் பத்து ஜனங்கள் சேர்ந்து ஒரு காரியத்தைப்பற்றி முடிவுசெய்ய ஆரம்பித்தால் ஒருவர் தமது யுக்தியால் ஒருமாதிரி செய்த தீர்மானத்தை அவரைக்காட்டிலும் புத்திமானுன மற்ருெருவர் தமது யுக்தியால் அதை வேறுவிதம் மாற்றிவிடுகிருர். இவ்விதம் ஒவ்வொருவரும் தம்தம் யுக்தியால் வெவ்வேறு விதமாய்த் தீர்மானித்தால் எதை எடுத்துக்கொள்கிறது? இவ்விதம் செய்யும் தீர்மானம் எப்படி ஓரிடத்தில் நிலைபெறும்? இவ்விதம், யுக்திவாதத்திற்குப் பலவித தோஷங்கள் ஸம்பவிக்குமாகையால் அதைக்கொண்டுமாத்திரம் ஒரு விஷயத்தின் தத்வத்தைச் சரியானபடி தீர்மானிக்க முடியாதென்பது எல்லாராலும் அங்கீகரிக்கக்கூடியதே. உட்புகுந்து விஷயத்தை நன்கு விசாரிக்காமல் மேல்நோக்கமாய்க் கவனிப்போர்களுக்கு அழகாயிருக்கும். ஆகையால் இதை முக்கியமாய் எடுத்துக்கொள்ளக்கூடாது.

பிரமாண வாதத்திலோவென்ருல் "பிரமாண வாதமென்பது ஈசுவரனிடமிருந்து வெளியான வேதவாக்கியங்களையாவது அல்லது மகரிஷிகளால் கூறப்பட்ட ஸ்மிருதி முதலிய கிரந்தங்களையாவது மூலமாகக்கொண்டு ஏற்படுகின்றது. யுக்திவாதத்தைப் போல் ஒருவரது புத்தியால் மாத்திரம் ஏற்படுகிறதில்லை. அவைகளில் ஈசுவரனிடமிருந்து வெளியான வேதவாக்கியங்களில் அற்பம்கூடத் தோஷமிருக்குமென்று சங்கிப்பதற்குக்கூட அவகாசமில்லை" என்பது ஆஸ்திகர்களனைவரும் அங்கீகரித்ததே. இதற்கிணங்கவே,

नहीश्वरव्याहृतयः कदाचित्पुष्णन्ति लोके विपरीतमर्थम् ।

ஈசுவரனுல் வெளியிடப்பட்ட வாக்குகள் ஒரு சமயத்திலும் விபரீதமான கருத்தைப் போதிக்கமாட்டா என்று கவிகளிற் சிறந்தவரான காளிதாஸர் கருதுகின்ருர்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

முதல் அநுபந்தம்.

ஸ்ரீ சங்கராசார்ய பாஷ்ய ஸித்தாந்தம்.

1. பிரஹ்மம் என்பது எது?

எது ஸர்வக்ஞமாயும், ஸர்வ சக்திவாய்ந்ததுமான வஸ்து வோ, எது எல்லா உலகங்களுக்கும் காரணமோ, அந்த நித்யசுத்த முக்த நிர்க்குணஸ்வபாவமுள்ளதுதான் பிரஹ்மம். இது அகண்ட மானது. (1-ம் அத்தியாயம், 1-ம் பாதம், 2-ம் ஸூத்ரம்.)

2. பிரஹ்மம் நிர்க்குண ஸ்வபாவமுள்ளதாயின், ஸர்வக்ஞத்வமும் (எல்லாவற்றையும் அறியும் குணம்) ஸர்வசக்திமத்வமும் (எல்லாம்வல்ல தன்மையைப் பெற்றிருத்தல்) அதற்கு எப்படிக் கூடும்?

ஷை குணங்கள் அவித்யாஸ்வரூபமான உபாதியினுல் ஏற்பட்டவையே ஒழிய உண்மையில் இல்லை. (2—1—14)

3. அவித்யை ஸத்பதார்த்தமா, அஸத் பதார்த்தமா?

ஸத்தென்றும் கூற இயலாது, அஸத்தென்றும் கூற முடியாது. ஆனுல் பிரஹ்மத்தின் மாயா சக்தியெனக் கூறலாம். இந்த அவித்யை சுருதி ஸ்மிருதிகளில் பிரகிருதி எனக் கூறப்படுகிறது. (2—1—14)

4. பிரஹ்மம் ஜகத்திற்கு நிமித்தகாரணமா, உபாதானகாரணமா? (காரணம், நிமித்தமென்றும் உபாதானமென்றும் இருவகையாகும். நிமித்தகாரணமாவது, ஒரு மட்குடத்தைச்செய்யுங்கால் குலாலாதிகளாவர். உபாதானமாவது, காரியரூபமாகவே பரிணமிக்கும் மிருத் (மண்) தாகும்.)

இரண்டும். (1—4—23)

5. உபாதானகாரணமாயின் அகண்டமான பிரஹ்மம் எப்படிப் பரிணமிக்க முடியும்?

உபாதானகாரணத்தில் பரிணுமி உபாதானமென்றும், விவர்த்தோபாதான மென்றும் இருவகையுண்டு. குடரூபமாகப் பரிண

மிக்கும் மிருத், பரிணாமி உபாதானமாகும். ஒரு பழுதையைக் கண்டு ஸர்ப்பமென்று பிரமிக்குங்கால், அச்சர்ப்பத்திற்குக் காரணம் எதுவோ அது விவர்த்தோபாதானமாகும். பிரகிருதத்தில் பிரஹ்மம் பரிணமிக்காவிடினும் ஜகத்திற்கு விவர்த்தோபாதான காரணமாயிருக்கின்றது. (2—1—27)

6. ஷை सर्परज्जु திருஷ்டாந்தத்தில் ஸர்ப்பம்எப்படி மித்யையோ அதுபோல் இந்த ஜகத்தும் மித்யைதானே?

ஆம். அதாவது—வியவகாரதசையில், பிரஹ்மத்தைப்போல் ஸத்யமென்றும், பாரமார்த்திக தசையில், ஸ்வப்னதிருஷ்ட பதார்த்தங்களைப்போல் மித்யையென்றும் தெரிந்துகொள்க. 'எல்லாம் பிரஹ்மம்' என்ற ஞானோதயத்திற்குமுன் வியவஹார தசையென்றும் அதற்குப்பின் பாரமார்த்திகதசை என்றும் தெரிந்துகொள்க. (2—1—14)

7. ஜகத் சிருஷ்டி என்றால், குலாலாதிகள், குடம் முதலியவற்றைப்போல் நூதனமாகச் சிருஷ்டிப்பதென்று அர்த்தமா?

இல்லை. இப்பிரபஞ்சத்திற்கு மூலகாரணமாயுள்ள, அவித்யா கல்பிதமாயும் அநிர்வசனீயமுமாகிய நாமரூபங்கள் உள. அவைகளை பிரஹ்மம் வியக்தமாகச் செய்தலே சிருஷ்டி. அவ்வித நாமரூபங்களினின்று ஈசுவரன் வேறுபட்டவன். (1-4-15, 2-1-14)

8. ஜகத் சிருஷ்டியினால் பிரஹ்மத்திற்கு யாது பிரயோஜனம்?

ஒருவித பிரயோஜனமுமில்லை. ஆனாலும் லீலையாகவே சிருஷ்டிக்கின்றது. (2—1—23)

9. ஜகத் எப்படி மித்யையோ அப்படி ஜீவனும் மித்யையா?

அல்ல. பிரஹ்மமும் ஜீவனும் ஒன்றே. ஆயினும் மாயா கல்பிதமான தேகம், இந்திரியங்கள் முதலிய உபாதிவசத்தினால் அவ்விருவருக்கும் பேதம் உண்டு. (1-2-20, 1-4-22)

10. 'ஜீவனும் பிரஹ்மமும் ஒன்று' என்றால் ஜீவனுக்குமாத்திரம் உபாதி எப்படி ஏற்பட்டது?

அது ஏற்பட்டதன்று; அநாதியானது. (2—1—14)

11. ஜீவனும் பிரஹ்மமும் ஒன்றானால், சாஸ்திரங்களில் கூறப்பட்ட விதி நிஷேதங்கள் எவர்பால் கூறப்பட்டவையாம்?

வியவஹாரதசையில் ஜீவன், தான் வேறு, பிரஹ்மம் வேறு என்று அறிந்து அவ்விதி நிஷேதங்களின்படி ஒழுகவேண்டும். இவ்வித கர்மானுஷ்டானத்தால் அந்தக்கரண சுத்தி ஏற்பட்டு ஞானமடைகிறன். ஆனல் காம்யகர்மம் (ஒரு பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பார்த்துச்செய்யும் செய்கை) ஞானஸாதனமாகாது. (2–3–18, 3–4–27, 4–1–16, 17, 18)

12. ஜீவனும் பிரஹ்மமும் ஒன்றுனல் ஒருவன் உபாஸகனும், மற்றொருவன் உபாஸ்யனும் எப்படி இருக்கமுடியும்?

பிரஹ்மம், ஸகுணமென்றும் நிர்க்குணமென்றும் இருவகையாகும். ஸகுணப்ரஹ்மமாவது ஈசுவரன். குணங்களோடும் அவயவங்களோடும் கூடியவன். நிர்க்குணமாவது யாதொரு குணமற்றதும் நிராகாரமாயுமுள்ளது. அக்ஞானதசையில் முதல் வகையைச் சார்ந்த பிரஹ்மம் உபாஸ்யனும், ஜீவன் உபாஸகனும் இருக்கின்றுர்கள். (1–1–12, 4–3–14)

13. ஜீவன் கர்த்தாவா? அப்படியாயின் அவனுடைய கர்த்ருத்வம் ஈசுவராதீனமா?

தச்சன் முதலியோர் ஆயுதங்களைக் கையிலேந்தி வீடுகட்டும் தொழிலில் அமர்ந்திருக்கும் வரையில் கர்த்தாக்களாகிறுர்கள். அதுபோல் ஜீவன் அவித்யா ஸம்பந்தமுள்ளவரையில் கர்த்தாவாகிறுன். பிறகு ஆவதில்லை. இவ்வித கர்த்ருத்வம் ஈசுவராதீனம்தான். ஈசுவரனே ஜீவனின் பூர்வகர்மங்களை யனுஸரித்துக் கர்மானுஷ்டானத்தில் ஏவுகிறுர். (2–3–40, 42)

14. தேகஸம்பந்தரூபமான ஸம்ஸாரத்தினின்று ஜீவனுக்குமுக்தியுண்டா?

உண்டு. "நானே பிரஹ்மம்" என்ற ஞானேதயமானவுடன் முக்தியடைகிறுன். முக்தியெனின், பரப்ரஹ்மத்தோடு ஐக்யமடைதல் என்று அர்த்தம். (1–1–39, 3–3–32, 4–3–14)

15. ஷை ஞானேதயத்திற்குமுன் செய்யப்பட்ட கர்மங்கள் என்ன ஆகின்றன?

புண்யகர்மமாயின் அந்த ஞானியின் மனைவி மக்கள் முதலியவர்களை அடைகிறது. பாபகர்மமாயின் அவனுடைய பகைவனை

அடைகிறது. பிராரப்தகர்மத்தை அனுபவித்தே தீரவேண்டும். இது மேற்கூறியவாறு பகைவனேயோ நேசனேயோ அடைவதில்லை. பிராரப்தத்தை அனுபவித்த பிறகுதான் ஐக்யமடைவான். (3—3—26, 4—1—15)

16. ஷை ஞானேதயமானவுடன் வேதங்கள் இருப்பனவா? இல்லையாயின், அவ்விதம் அஸத்யமான வேதத்தில் கூறியபடி உபாஸித்தால் ஸத்யமான நல்லறிவு எப்படி ஏற்படும்?

வேதங்கள் 'பிரஹ்மஸ்வரூபமேதான்' என்கிற ஞானேதயத்திற்குப் பிறகு இருப்பன அல்ல. ஆயினும், அதனுல் ஸத்யபலனும் உண்டாகும். எப்படியெனின் அஸத்யமான ஸ்வப்னத்தில் சில வஸ்துக்களைக் கண்டால் உண்மையில் ஏராளமான ஐசுவரியம் முதலியவற்றைப் பெறுகிறுன். மேலும் அஸத்யமான सर्परज्जु ஞானத்தினுல் உண்மையாகவே பயந்து ஓடுகிறுனல்லவா? அவ்வாறே அஸத்யமான வேதத்திற்கூறிய உபாஸனையாலும் ஸத்ய பலனுண்டு. (2—1—14)

17. ஸ்வப்ன பதார்த்தங்கள் ஸத்யமானவையா?

இல்லை. மித்யாபூதமானவை.

18. மாயாவிசிஷ்டமான ஸகுணப்பிரஹ்மத்தை உபாசிப்பதால் என்ன பலன்?

உபாஸகனுகிய ஜீவன் இஹத்தில் தான் நினைத்த மாத்திரத்தில் எல்லாவற்றையுமடையும் ஓர் ஐசுவரியத்தைப் பெறுகிறுன். (4—3—14)

பரத்தில், அர்ச்சிராதி மார்க்கத்தினுல் சதுர்முகப் பிரஹ்மனையடைந்து அந்த உலகத்தின் பிரளயகாலத்தில் நன்ஞானமடைந்து பிரஹ்மாவுடன்கூட விஷ்ணுபதத்தை அடைகிறுன். (4-3-1) இவன் இவ்வுலகிற்கு மீண்டும் திரும்பிவராமல் கிரமமாக ‡ நிர்வாணமடைகிறுன்.

---

‡ बवयोरभेदः என்றபடி निर्वाणं = निर्बाणं बाणं = சரீரம். இந்த அர்த்தத்தை பிரச்னேபநிஷத்தில் இரண்டாவது பிரச்னத்தில் இரண்டாவது மந்திரத்தில் காண்க. முடிவில் निर्वाणं = சரீரத்தினின்று விடுபடுதல் என்று அர்த்தம்.

19. நிர்க்குணப் பிரஹ்மத்தை உபாஸிப்பதால் யாது பலன்?

உபாஸகன் பரப்பிரஹ்மத்தோடு ஐக்யமடைகிறான். (4-3-14)

20. மரணத்திற்குப் பிறகு ஜீவர்களின் கதி என்ன?

நற்காரியம் செய்தோர் தூமாதிமார்க்கத்தினால் சந்திரலோகமடைந்து அங்குச் சுகங்களை யனுபவித்துச் சேஷமான கர்மத்தின் பயனாக இவ்வுலகிற்கே திரும்பிவந்து கர்மானுஸாரம் நானாவித ஜன்மங்களை யடைகின்றனர். (3—1—8) துஷ்காரியம் செய்தோர் யமலோகமடைந்து நானாவித துக்கங்களை யனுபவித்துப் பிறகு இவ்வுலகிலேயே பிறக்கிறார்கள். (3—1—13, 14)

21. பிரஹ்மம் சிலரைச் சுகிகளாயும் மற்றும் சிலரைத் துக்கிகளாயும் செய்திருப்பதின் காரணமென்ன?

அவரவர்களின் அநாதிவினையே காரணம். இவ்விஷயம் ஸ்ரீமத் பகவத்கீதையில்,

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ।

என்ற சுலோகத்தில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. (2–1–34, 35)

ஸ்ரீ சங்கராசாரியார் யாருடைய அவதாரம்? எங்கு அவதரித்தனர்?

பரமசிவனாரின் அவதாரம். இந்தியாவின் மேற்குக்கரையில் காலடி என்னும் கிராமத்தில் அவதரித்தனர்.

இம்மஹான் அற்பகாலமே இப்புவியில் விளங்கினாலும் அதற்குள் சகல ஜனங்களும், ஸம்சாரமென்னும் இக்கொடிய பந்தத்தால் ஏற்படும் கஷ்டங்களை அறவே யொழித்து உத்தமமான மோக்ஷசுகத்தைப் பெறவேண்டி அந்தந்த அதிகாரிகளுக்குற்றவாறு பல நன்மைகளைச் செய்திருக்கின்றார்கள்.

M. ராம ராவ்.
ஸ்ரீ மாத்வஸபையின் காரியதரிசி,
கும்பகோணம்.

இரண்டாம் அநுபந்தம்.

ஸ்ரீ ராமாநுஜாசார்ய பாஷ்ய ஸித்தாந்தம்.

1. ஜகத்திற்குக் காரணம் எது?

நம் கண்ணுக்கு ஜகத்தென்று புலப்படும் இப்பிரபஞ்சமானது ஸ்தூல சிதசித் விசிஷ்டபிரஹ்மமேதான். அதற்கு ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டபிரஹ்மமே காரணம்.

2. பிரஹ்மம் நிமித்தகாரணமா, உபாதான காரணமா?

இரண்டுவித காரணமும் பிரஹ்மமே.

3. பிரஹ்மத்தின் ஸ்வரூபமென்ன?

எதற்கு எல்லா உலகங்களையும் ஆக்கல், அளித்தல், அழித்தல் இயற்கையோ, அது பிரஹ்மம். எல்லாவித தோஷமுமற்றது. எல்லா மங்களகரமான குணங்களுக்கும் இருப்பிடமானது. ஸத்யமானது. ஸர்வக்ஞமானது. எல்லாப் பொருள்களின் ஸ்வரூபமானது. ஒப்புயர்வற்றதும் முடிவற்றதுமான ஆநந்தத்தைப் படைத்தது. (1-1-1,2; 3-2-11)

4. உலகத்திலுள்ள பொருள்களில் சில தோஷமுள்ளவையாயும், சில தோஷமற்றவையாயுமுள. பிரஹ்மம் எல்லாவற்றின் ஸ்வரூபமாயின், தோஷமுள்ளதாய்விடுமல்லவா?

வாயு சுத்தமானப் பிரதேசத்திலும் அசுத்தமானப் பிரதேசத்திலும் வீசியபோதிலும் எப்படி நிர்த்துஷ்டமோ அப்படியே பிரஹ்மமும் ஸர்வாந்தர்யாமியாயிருப்பதால் குற்றமுள்ளதன்று. (3—2—11)

5. இப்பிரஹ்மத்தை எப்படி அறிவது?

சாஸ்திரங்களின் வாயிலாக அறியவேண்டும்.

6. எல்லாவற்றிற்கும் காரணமான பிரஹ்மம் ஸ்வப்ன பதார்த்தங்களுக்கும் காரணம்தானு? அவைகள் ஸத்யமானவையா, மித்யையா?

ஆம். (3—2—1) அவைகள் மித்யையல்ல. மின்னல் முதலியவைகளைப்போல் தாத்காலிகமாயும் அந்தந்தப் புருஷர்களினுல் அநுபவிக்கக் கூடியவையாயும் இருக்கின்றன. (1—1—1)

7. ஜகத் சிருஷ்டியினுல் பரமாத்மாவுக்கு யாது பிரயோஜனம்?

க்ரீடார்த்தம். (2—1—33)

8. ஜீவனும் பரமாத்மாவும் ஒன்ரு?

இல்லை. இருவருக்கும் பேதமுண்டு. (2—1—22)

9. ஜீவன் அணுவாய் ஒரே விடத்திலிருப்பவனு, எல்லா விடங்களிலும் இருப்பவனு?

ஜீவன் அணுத்தான். ஹிருதயதேசத்தில் மாத்திரம் இருப்பான். (1—2—18; 2—3—20)

10. ஹிருதயத்தில் மாத்திரமிருந்தால், மற்ற அவயவங்களில் உண்டாகும் வேதனை முதலியவைகளை எப்படி உணரக் கூடும்?

ஓர் விளக்கு ஒரே இடத்திலிருந்தாலும் தன் பிரகாசமெனும் குணத்தால் எங்கும் பரவுவதுபோல், ஜீவன் தேகமெங்கும் வியாபித்து ஆங்காங்குள்ள ஸுகாதிகளை அநுபவிக்கிருன். (2-3-26)

11. ஜீவன் ஸ்வதந்திரகர்த்தாவா, அஸ்வந்திர கர்த்தாவா?

அஸ்வதந்திர கர்த்தாதான். (2-3-33,40)

12. அப்படியாயின் சாஸ்திரத்திற் கூறப்பட்டுள்ள விதி நிஷேதங்களின்படி ஒழுகச் சக்தியற்றவனுகிருன். விதி நிஷேத ரூபமான சாஸ்திரம் பயனற்றதா?

சாஸ்திரத்திற் கூறப்பட்டவைகளை அனுஷ்டிப்பதிலும், அனுஷ்டியாமலிருப்பதிலும் ஜீவன் ஸ்வதந்திரனே. அனுஷ்டானத்திற்குப் பிறகு ஜீவன் அஸ்வதந்திரனுகிருன். (2-3-41)

13. ஜீவனின் பூதஸம்பந்தமானது மரணத்திற்குப்பின் நிவர்த்தியடைகிறதா?

மரணமடைந்த மாத்திரத்தினுலே போவதில்லை. முக்தியையடைந்த பிறகே ஒழிந்துபோகும். அதுவரையில் தன் கர்மானுஷ்டானத்திற் கேற்றவாறு மீண்டும்மீண்டும் ஜன்மங்களையடைகின்ருன். (3—1—1)

14. ஜீவன் முக்தியை எப்படிப்பெறலாம்?

பகவானை உபாஸிக்கவேண்டும். பிறகு அதனுல் திருப்தியடைந்து பரமாத்மா முக்தியைத் தருகிருர். (3—4—1)

15. உபாஸனை என்ருல் என்ன?

பகவானை இடைவிடாது ஸ்மரிக்கவேண்டும். பக்தியைப் படைக்கவேண்டும். இம்மாதிரி பக்குவமான தியானத்திற்கு

உபாஸனை எனப்பெயர். உபாஸகன், உபாஸனைக்கு அங்கமான கர்மங்களையும் அநுஷ்டிக்கவேண்டும். (3—4—26)

16. 'நானே பிரஹ்மம்' என்று உபாஸிப்பதா, 'நான் வேறு, பிரஹ்மம் வேறு' என்று உபாஸிப்பதா?

ஜீவன் எப்படிச் சரீரத்திற்கு யஜமானனாக இருக்கிறானோ அப்படி ஈசுவரன் ஜீவனுக்கு யஜமானன் என்று உபாஸிக்கவேண்டும். (4—1—3)

17. வேதங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்யும் அதிகாரிகள் யாவர்?

அக்கர்மாக்கள் ஸாதாரண கர்மங்களெனவும், அஸாதாரண கர்மங்களெனவும் இருவகையாகும். அக்னியை யபேக்ஷியாத மெய் பேசுதல், அஹிம்ஸை முதலியவை ஸாதாரணமாவன. இவைகளில் எல்லாவருணத்தாருக்கும் அதிகாரமுண்டு. அக்நியை யபேக்ஷிக்கும் யாகாதி கர்மங்கள் அஸாதாரணமாவன. இவைகளில் மூன்று வருணத்தாருக்குமட்டும் (பிராமணர், க்ஷத்திரியர் வைசியர்) அதிகாரமாம். (1—3—33)

18. அப்படியாயின், மூன்று வருணத்தாருக்கேமோக்ஷம். மற்றவர்களுக்கு இல்லையா?

அப்படியன்று. மற்றவர்களும் பாகவத தர்மத்தையும் தங்களுக்கேற்ற பரிசர்யை முதலியவைகளையும் செய்து ஈசுவரனை ஆராதித்தால் மோக்ஷமடைவார்கள். (2—2—42)

19. மோக்ஷம் என்றால் என்ன?

ஜகத் சிருஷ்டியைத் தவிர இதர பகவத்குணங்களின் ஸாம்யமடைவதே (பரமஸாம்யமடைதலே) மோக்ஷம். (4—4—17)

20. மோக்ஷத்தில் ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் பேதமுண்டா?

இல்லை. ஜீவன் பரமாத்மாவின் சரீரத்தையடைந்து ஒன்றாகி, 'நானே பிரஹ்மம்' என்று சுகங்களை யனுபவிக்கிறான். (4—4—4)

21. மோக்ஷமடைந்த ஜீவன் (முக்தன்) ஏற்கனவே செய்த கர்மம் என்ன ஆகின்றது?

உபாஸனைக்குமுன் செய்யப்பட்ட அப்ராரப்தகர்மம் உபாஸனையால் நாசமடைகிறது. அதற்குப் பிறகு செய்யும் கர்மம் அவனை ஒட்டுவதில்லை. இவ்விரண்டு வகையான கர்மங்களில்

புண்யகர்மம் அவன் நேசர்களையும், பாபகர்மம் பகைவர்களையும் சேர்கின்றன. பிராரப்தகர்மத்தைச் செய்த ஜீவனே அநுபவித்துத் தீரவேண்டும். (4-1-13,17,19)

22. இத்தேகத்தைத் துறந்த பிறகு ஜீவனின் கதி என்ன?

பகவதுபாஸனை செய்தவர்கள் அர்ச்சிராதி மார்க்கத்தினால் விஷ்ணுலோகமடைந்து அங்குப் பரமாத்மாவின் சுகத்தை அநுபவிக்கிறார்கள். யாகாதி கர்மங்களைச் செய்தவர்கள் தூமாதி மார்க்கத்தினால் சந்திரலோகமடைந்து அங்கிருந்து ஸ்வர்க்கம் முதலிய சுகங்களையனுபவித்து மீண்டும் இவ்வுலகிற்கே திரும்பி வருகிறார்கள். பாபிகள் சந்திரலோகமிருந்து யமலோகம்போய் அங்குச் சிக்ஷைகளை யனுபவித்து மறுபடியும் இவ்வுலகின்கண் பிறக்கிறார்கள். (3—1—12)

23. முக்தர்கள் மேற்சொன்னவாறு இங்குப் பிறப்பார்களா?

ஒருபோதும் திரும்பி வருவதில்லை. அவர்களுக்குப் புனராவிருத்தி இல்லை. (4—4—22)

24. ஸ்ரீ இராமாநுஜாசாரியார் யாருடைய அவதாரம்?

இவர் ஆதிசேஷனின் அவதாரம். ஸ்ரீபெரும்பூதூர் என்னும் கிராமத்தில் அவதரித்தனர். இவரும் பொதுஜனங்களின் க்ஷேமத்தைநாடிப் பல நன்மைகளைச் செய்தருளியுள்ளனர்.

M. ராம ராவ்.
ஸ்ரீ மாத்வஸபையின் காரியதரிசி,
கும்பகோணம்.

லக்ஷார்ச்சனை.

நன்னிலம் தாலூகா செம்மங்குடி கிராமத்திலுள்ள சிவன் கோவிலில் ஸ்ரீ ஆநந்தவல்லி சமேத ஸ்ரீ அகஸ்தீசுவரஸ்வாமிக்கு சாரத நவராத்திரியில் நாளது புரட்டாசிமீ 3௳ வெள்ளிக்கிழமை முதல் 11௳ சனிக்கிழமை வரையில் அகஸ்தீசுவர ஸ்வாமிக்கு அபிஷேக அலங்காராதிகளும் ஸ்ரீ ஆநந்தவல்லி அம்மனுக்கு லக்ஷார்ச்சனையும் ஷெ கிராமவாசிகளால் நடத்தி 12௳ ஞாயிற்றுக்கிழமையும் ஸ்வாமி அம்மனுக்கு ருத்ராபிஷேகமும் நடந்து வெகு சிறப்பாக முடிவுபெற்றது.

M. S. சுந்தரேசய்யர்.

கடன் தொல்லை.

மனிதர்களுக்கு உலகவாழ்க்கையிலே எண்ணிறந்த தொல்லைகள் உண்டாகலாம். அவற்றுள்ளும் மிகமிகக் கொடியது கடன் தொல்லையேயாம். கடன், வரவுக்கு மேலாகச் செலவு செய்து இன்புற விரும்புவோரை வந்தடையும். அறத்தினைச் செய்வதற்கானாலும் இன்பத்தை நுகர்வதற்கானாலும் கடன்படுவோர் அறிவற்றவரே. கடன் துன்பத்தையும் அவமானத்தையுமே உண்டாக்கும்; இன்பத்தை ஒருபொழுதும் கொடுக்கமாட்டாது. பொருளாளராக இருக்கும்போழ்து வரவேற்றுக் கடன்கொடுத்தவர் கடனாளியான பிறகு வெறுப்புடன் நோக்குவர். கடன் கொண்டவரும் கடன் கொடுத்தவரைக் காணில் நாணித்தலைகுனிந்து மறைவர்.

கையிற்பொருள் இல்லையானால் கூலிக்குவேலைசெய்து வயிறு வளர்க்கலாம்; அஃது இழிவினைத்தராது. தடுக்கமுடியாததானால் பிச்சை ஏற்று உயிர்வாழ எண்ணினாலும் எண்ணலாம்; அதுவும் இழிவாகமாட்டாது. இவற்றால் பிறருக்கும் எவ்விதத் தீங்கும் உண்டாகமாட்டாது; எவரையும் கண்டு நாணித் தலைகுனிந்து மறையவேண்டியதில்லை; அஞ்சவேண்டியதும் இல்லை. இவற்றால் உண்டாகும் துன்பம் மிகச்சிறியதே. அச்சிறு துன்பத்தையும் ஆராய்ந்தறியும் அறிவால் போக்கிக்கொள்ளலாம். கடன் தொல்லையால் வரும் துன்பத்தை நீக்கிக்கொள்ளல் கூடாததாம். கடன் தொல்லை தொழுநோய்களாலுண்டாகும் துன்பத்திலும் கொடிய துன்பத்தைக் கொடுப்பதாகும்.

கடன் கொண்டவர் தூண்டிலே அகப்பட்ட மீன்போலத் துடிப்பர்; கிரகணம் பிடிக்கப்பட்ட சூரிய சந்திரர்களைப்போல ஒளி மழுங்குவர்; தழலிலிட்ட மெழுகுபோல உருகாநிற்பர்; பாம்பின் வாய்ப்பட்ட தேரைபோலப் பரிதவிப்பர். அவர் பொய் பேசப் பின்வாங்கார்; அழிவழக்காடத் தயங்கார்; களவு கொலை முதலிய தீச்செயல்களுக்கும் துணைபோவர்; சமயம் வாய்க்கில் செய்யவும் செய்வார். கடன்கொண்டவன் கால்மனிதன்; கடன்

கொண்டவன் மனம் பெரிதும் கலங்கும். ஸ்ரீ ராமபிரானுடைய அம்புப்பட்டுக் கலங்கிய இராவணன் 'கடன்கொண்டார் நெஞ்சம் கலங்குவதுபோல'க் கலங்கினன். கடன் காலனுக்குச்சமம்.

" 'கடன் கொண்டும் செய்வன செய்' என்பது பெரியோர் வாக்கு. எனக்கோ இப்பொழுது செய்தாகவேண்டிய காரியம் மிகவும் அவசியமானது. என்னிடத்திலோ பொருளில்லை. நான் செய்யத்தக்கது யாது? கடன்கொண்டுதானே அதனைச் செய்து முடித்தல்வேண்டும்" என்று ஒரு சிலர் எதிர்வாதம் பேசுகின்றனர். இந்த வாக்கியம் உபசாரமாகக் கூறிய வாக்கியமேயாகும். உபதேசவாக்கியமாகாது. அன்றியும், அது வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்கும் சக்தியைப் பெற்றவர்களைக் குறித்துக்கூறியதாகும். வாங்கியகடனைத் திருப்பிக்கொடுக்கும் சக்தியைப் பெறாதவர் அதனை மேற்கொள்ளலாகாது. அன்னார் தங்களது நிலைமைக்கு ஏற்பவே காரியங்களைச் செய்தல்வேண்டும். 'கடன் உண்டு வாழாமை காண்டல் இனிதே' என்பதுதான் எல்லாராலும் விடாது கைக்கொள்ளப்படவேண்டிய நீதியுரையாவது.

ஒருவன் தனது பொருளிலே ஒரு பகுதியை மற்றொருவனுக்குக் கடனாகக் கொடுக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். எதன்பொருட்டு அக்கடன் கொடுக்கப்படுகிறது? சில நாட்களுக்கெல்லாம் ஒரு சிறிது வட்டியோடு முதலாகக்கொடுத்த பொருளும் சேர்ந்துவரும் என்ற நம்பிக்கையுடனேயே கொடுக்கப்படுகிறது. அன்றியும், அங்ஙனம் கொடுத்தவர் தமது கருத்தின்படி கடன் வாங்குபவரிடம் உடன்படிக்கை செயதுகொண்டே கொடுக்கிறார். கடன் வாங்குபவரும் "நான் தங்களிடம் வாங்கும் இந்த முதற்பொருளை இவ்வளவு வட்டிப் பொருள் சேர்த்து இந்த நாளைக்குள் கொடுத்துவிடுவேன்" என்று உடன்பட்டு நம்பிக்கை செய்தே பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு கடன் பெறுவோர் குறித்தகாலத்திலே குறித்த பொருளைத் தமக்கு முன்னர் உதவி புரிந்தவருக்குக் கொடுத்தாக வேண்டாமா? கொடாவிடில் அது நம்பிக்கைமோசம் பண்ணியதாகாதா? இவ்வளவுதானே கடனால் வரும் தொல்லை? ஒருவன் 'தன்னால் கொடுக்கப்பட்ட கடன்

இந்த நாளில்வரும்' என்று நம்பித் தனது காரியத்தின்பொருட்டு வேறொருவரிடம் அந்தக்கெடுவைச்சொல்லிக்கடன்வாங்குகிறான். அவன் எண்ணியபடி வரவேண்டிய கடன்தொகை வராவிட்டால் அவனது நாணயமும் தவறிவிடுகின்றது. அவனுக்குக் கடன் கொடுத்தவனும் கஷடத்திற்குள்ளாகிறான். பாருங்கள்! ஒருவன் தனது நிலைமையை அறியாமல் வரம்புகடந்து செலவு செய்து கடன்பட அவனுக்கு உதவிசெய்ய முன்வந்த பலர் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

சிலர், 'நிலத்தில் விளையும் தானியங்களை விற்றுக் கொடுப்போம்' 'வியாபாரத்தில் இலாபம்வரும் கொடுப்போம்'; 'கையிருப்பிலுள்ள தானியங்களை விற்றுக்கொடுப்போம்' என்றெல்லாம் மனக்கோட்டைக் கட்டிக் கடன் வாங்கிச் செலவுசெய்வர். அவருக்கு அத்தகைய மனோராஜ்யம் பலமுறைகளில் சித்திபெறமாட்டாது. அவற்றிற்கு எதிர்பாராது வேறு சில செலவுகள் உண்டாகலாம். அதனால், தாம் நினைத்தபடி கடனை அடைக்கமுடியாது போய்விடலாம். அப்பொழுது என்ன செய்வது? அன்னார் மானியாதலின் தமது நிலத்தை விற்றுக் கடனைக்கொடுக்க வேண்டியவராவார். கடன்பட்டு உழல்வதற்கு நிலத்தை விற்றுக் கடனைக்கொடுத்துக் கடன் அற்றவராக இருப்பது மேலானது. ஆனாலும், அவர் தமது நிலைமையைக் குறைத்துக்கொண்டவரேயாவர். அவர் சிறிது முன் அறிவோடு ஆராய்ந்து தொடக்கத்திலேயே 'விற்றுக் கொடுப்போம்' என்று கருதியவற்றை அப்பொழுதே விற்றுக் காரியத்தைச் செய்திருப்பாராயின், அவர் தமது நிலைமையினின்றும் தாழ்ந்தவராகமாட்டார்.

சிலர் 'அழகுக்குச் செய்துகொண்டால் ஆபத்திற்கு உதவும் ஆஸ்தியாகும்' என்று சொல்லிக் கடன்வாங்கி ஆபரணங்களைச் செய்கின்றனர். சிலர் கடன்வாங்கி நிலம் முதலியவற்றை வாங்குகின்றனர். சிலர் கலியாணம் முதலியவற்றிற்காகப் பெரும்பொருளைக் கடனாகவாங்கிச் செலவழித்து விழிக்கின்றனர். சிலர் 'வழக்குகளாடிப் பெரும்பொருளைத் தேடிவிடலாம்' என்று எண்ணிக் கடன்வாங்கி வழக்குகளின் பொருட்டுச் செலவு செய்து

ஏமாறுகின்றனர். சிலர் கடன்வாங்கி வணிகம்செய்யத் தொடங்குகின்றனர். இச்செயல்கள்பெரும்பாலும் நன்மையைத்தரமாட்டா. வாங்கின கடனுக்கு வட்டி கொடுக்கவும் முடியாமல் வாங்கியவற்றை விற்றும் வியாபாரத்தில் நஷ்டமடைந்தும் துன்புறுகின்றவர் பலர். இவர் அனைவரும் தங்களுடைய ஆடம்பர எண்ணங்களையும், பேராசையையும்விட்டு 'உள்ளதைக்கொண்டு ஊராளவேண்டும்' என்றபடி அடங்கி வாழ்ந்திருப்பாராயின் துன்புறநேர்ந்திருக்காது என்றும் இன்பமுற்றே வாழலாம்.

சிலர் ஒருவரிடத்தில் வாங்கின கடனைத் தீர்ப்பதற்கு அந்தக் கடனுக்குள்ள வட்டியுள்பட வேறொருவரிடத்திலே கடனாக வாங்குகின்றனர். இங்ஙனமே இவர் ஒருவரது கடனைத் தீர்த்தற்கு மற்றொருவரிடம் கடனாக வாங்கி உள்ள சொத்துக்களை இழக்கின்றனர். இவ்வாறு வழியறியாது துன்புறுகின்றவர் ஆதியிலேயே தமது சொத்தில் ஒருபாகத்தை விற்றுச்செய்யவேண்டியதைச் செய்திருப்பாரானால், அவர் இத்துணைத் தொல்லைகளுக்கு உள்ளாகவேண்டியிராது. காரியத்தையும் நிறைவேற்றியதுடன் சிறிது ஆஸ்தியுள்ளவராகவும் இருப்பார்.

ஆதலின், மக்களாவார் ஒவ்வொருவரும் தத்தமது நிலைமையை ஆராய்ந்து 'வரவு எவ்வளவு? செய்யவேண்டிய இன்றியமையாச் செயல்கள் எவை?' எனபவற்றை அறிந்துகொள்ளவேண்டும். வரவிலே நாலில் ஒரு பங்கினை ஆஸ்திக்குச் சேர்த்துக்கொண்டு மிகுதி முக்காற்பங்கினைத்தமது செலவுக்காக்கிக்கொள்ளவேண்டும். நிறைந்த வருமானம் உள்ளவராயின் அந்த மிகுதியில் மூன்றில் ஒன்றைத் தருமத்திற்குச் செலவுசெய்து பாக்கி இரண்டு பாகத்தைத் தமது செலவுக்கு வைத்துக்கொள்ளவேண்டும். இம்முறையே கடன் தொல்லையினின்றும் விடுவிப்பதாம். கடன்படா வாழ்க்கையே கண்ணுக்கு அழகு; காசினியோர் புகழ்ச்சிக்கும் உரியது.

தண்டமிழ்த் தொண்டன்.